தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு : 94436 99066

dinakani2023@gmail.com
www.dhinakani.com
நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்

KANI GYM
CALL:9894808044

மலர் : 02 | இதழ் :205 | 4 - பக்கம் | 21.02.2025 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6




**இலன்என்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து.**

விளக்கம்:

வறுமையின் காரணமாக ஒருவன் தீய செயல்களில் ஈடுபடக்கூடாது; அப்படி ஈடுபட்டால் மீண்டும் அவன் வறுமையிலேயே வாட வேண்டியிருக்கும்.



புதுடெல்லி: டெல்லி முதல்வராக பதவியேற்ற ரேகா குப்தாவுக்கு வாழ்த்து தெரிவித்த பிரதமர் நரேந்திர மோடி, அவர் அடிமட்டத்திலிருந்து உயர்ந்து வந்துள்ளவர் என்றும், டெல்லியின் வளர்ச்சிக்காக முழுவீச்சில் பாடுபடுவார் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார். டெல்லி முதல்வராக ரேகா குப்தா பதவி ஏற்றுள்ளதை அடுத்து, பிரதமர் நரேந்திர மோடி அவருக்கு தனது வாழ்த்தை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "டெல்லி முதல்வராகப் பதவியேற்ற ரேகா குப்தாவுக்கு வாழ்த்துக்கள். அவர் அடிமட்டத்திலிருந்து உயர்ந்து, கல்லூரி வளாக அரசியல், மாநில அளவிலான கட்சிப் பொறுப்பு, நகராட்சி நிர்வாகம் ஆகியவற்றில் தீவிரமாக செயல்பட்டு, இப்போது எம்.எல்.ஏ.வாகவும், முதல்வராகவும் உள்ளார். டெல்லியின் வளர்ச்சிக்காக அவர் முழு வீரியத்துடன் பாடுபடுவார் என்று நான் நம்புகிறேன். அவரது பதவிக்காலம் பலன் அளிக்க எனது வாழ்த்துகள்" என தெரிவித்துள்ளார்.

## ஜே.எம்.ஜே மீடியாவின் (Talent Show) போட்டி நிகழ்ச்சிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு.




சமூகத்திற்கு தேவையான பல விடயங்களை முன்னெடுத்து வருவதில் ஐே.எம்.ஜே மீடியாவின் செயற்பாடு தனித்துவமென்பது பலர் அறிந்த விடயம். அந்த வகையில் ஜனவரி மாதம் ஆரம்பம் முதல் இறுதி வரை சர்வதேச ரீதியில் இலை மறை காயாக இருக்கும் திறமையானவர்களின் பல்துறை திறன்ளை உலகறியச் செய்ய வேண்டும். என்ற நோக்கத்தில் *J.M.J media* அனுசரணையுடன் ஆக்கத்திறன் போட்டி நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த நிகழ்வுக்கான சான்றிதழ்கள் இன்று *J.M.J media* வினால் வழங்கப்பட்டது. இந் நிகழ்வு *J.M.J media* வின் நிறுவன பணிப்பாளர் ஜஸூரா ஜலீலின் தலைமையின் கீழ் வெகு விமர்சையாக நடைபெற்றதுடன் இவ்வமைப்பில் சர்வதேச ரீதியாக இணைந்துள்ள அனைத்து ஒருங்கிணைப்பாளர்கள் மூலமும் நடத்தப்பட்டதென்பது குறிப்பிடதக்கது. அந்தவகையில் இந்நிகழ்வில் உலக நாடுகளில் உள்ள பலரும் வயது வித்தியாசம் இன்றி கலந்து கொண்டதே இந்த நிகழ்வின் வெற்றியாகும். கோலம் போடுதல், வரைதல், பாடுதல், ஆடுதல், கைவண்ணங்களை செய்தல் என்று ஒவ்வொருவரின் தனிப்பட்ட திறமைகளும் பல்வேறு வகையில் வெளிக்காட்டி இருந்தனர். இப்போட்டியில் பங்குபற்றியவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் தங்களின் திறமைகளை இவ்வாறு உலகறியச் செய்ய முன் வந்த ஜே.எம்.ஜே மீடியாவுக்கு நன்றியும் பாராட்டுக்களையும் தெரிவித்திருந்தனர். தொடர்ந்து இவ்வாறான பல திட்டங்களை எதிர்கால சமூக நலன்கருதி தமது *J.M.J* மீடியா அமைப்பு செய்யவுள்ளதென்பதை அதன் ஸ்தாபகர் எமக்கு தெரிவித்தார்.

## விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி அருகே தமிழ்நாடு பனையறிகள் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பாக அறப்போராட்டம்



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி வட்டம் வேம்பி மதுரைபூரி குடிசையில் பனையேறிகள் வாழ்வாதாரமான பணங்களில் கலப்படம் என தகவலின் அடிப்படையில் விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவின் பேரில் அதிகாலை 4 மணி அளவில் அதிரடி சோதனையில் 100க்கு மேற்பட்ட காவல்துறையினர் பனையேறிகளின் கலயங்களை உடைத்தனர் இதனை தடுக்கும் விதமாக தமிழ்நாடு பனையர்கள் பாதுகாப்பு இயக்கத்தின் தலைவர் A. சிவக்குமார் பெட்ரோல் ஊத்தி தீ குளித்தார் அவரை உடனடியாக அரசு மருத்துவமனை முண்டியம்பாக்கம் ஆம்புலன்ஸ் மூலம் அனுமதிக்கப்பட்டனர் இதனைத் தொடர்ந்து தங்களின் வாழ்வாதாரமான பணங்கள் இறக்கி சந்த படுத்துவதை காவல்துறையினர் தடுக்கும் விதமாக செயல்படுவதை கண்டித்து 500-க்கும் மேற்பட்டபனையேறி விவசாய குடும்பங்கள் விழுப்புரம் டு செஞ்சி தேசிய நெடுஞ்சாலையில் அறப்போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறனர்

# ரூ.2,152 கோடி கல்வி நிதி: உடனடியாக விடுவிக்கக் கோரி பிரதமருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்






சென்னை: பிப்,21

தமிழக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி, 'சமக்ர சிக்ஷா' திட்டத்தின்கீழ் ரூ.2,152 கோடி நிதியினை உடனடியாக விடுவிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில் முதல்வர் ஸ்டாலின், தேசிய கல்விக் கொள்கை-2020-ஐ முழுமையாக அமல்படுத்தி, மும்மொழிக் கொள்கையை ஏற்கும் வரை, தமிழ்நாட்டிற்கான 'சமக்ர சிக்ஷா' (Samagra Shiksha) திட்டத்தின்கீழ் நிதி விடுவிக்கப்பட மாட்டாது" என்று ஒன்றிய கல்வித் துறை அமைச்சர் சமீபத்தில் தெரிவித்திருப்பது ஆழ்ந்த கவலை அளிக்கிறது. இது தமிழ்நாட்டில் உள்ள மாணவர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் பெருத்த கவலையையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டின் கல்வி மற்றும் சமூகச் சூழலில், இருமொழிக் கொள்கையானது நீண்ட காலமாக ஆழமாக வேரூன்றியுள்ளதாகவும், அதனைப் பின்பற்றுவதில் தமிழ்நாடு எப்பொழுதும் உறுதியாக உள்ளது. அலுவல் மொழிகள் விதி, 1976-ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, "அலுவல் மொழிச் சட்டம், 1963"-ஐச் செயல்படுத்துவதில் இருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. நவோதயா வித்யாலயா போன்ற ஒன்றிய அரசுப் பள்ளிகள் மும்மொழிக் கொள்கையைப் பின்பற்றுவதால் தான், தமிழ்நாட்டில் அவை நிறுவப்படவில்லை. இந்த இரு மொழிக் கொள்கை மற்றும் சமூக நீதியின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட முற்போக்குக் கொள்கைகளின் காரணமாக, கடந்த அரை நூற்றாண்டில் தமிழ்நாடு அடைந்துள்ள மகத்தான முன்னேற்றங்கள் மற்றும் அதற்கு வித்திடும் முன்முயற்சிகளைக் காண முடிகிறது. எங்கள் இருமொழிக் கொள்கையில் எந்தவொரு மாற்றமும் கொண்டுவர உத்தேசிப்பது தமிழ்நாட்டிற்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் பெரிய அளவில் பயனளிக்காது என்பதை மேலே உள்ளவை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. இதுதவிர, தேசியக் கல்விக் கொள்கை-2020-ல் குறிப்பிடப்பட்டுள்ள சில விதிகள் குறித்து 27.08.2024 நாளிட்ட எனது கடிதத்தின் மூலம் தமிழ்நாடு அரசின் ஆழ்ந்த கவலைகள் முறையாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதோடு, 27.09.2024 அன்று தனிப்பட்ட முறையில் விரிவான கோரிக்கை மனுவாக இந்தியப் பிரதமரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இருப்பினும், பலமுறை கோரிக்கை விடுக்கப்பட்டும், "சமக்ரா சிக்ஷா" திட்டத்தின்கீழ் வழங்கப்பட வேண்டிய நிதி ஒன்றிய அரசால் வழங்கப்படாமல் உள்ளது. ஒன்றிய அரசின் இரண்டு வெவ்வேறு திட்டங்களான "சமக்ர சிக்ஷா" திட்டத்தையும், தேசிய கல்விக் கொள்கையைப் பிரதிபலிக்கும் பி.எம்.ஸ்ரீ. (PM SHRI) திட்டத்தையும் ஒன்றாகப் பொருத்திப் பார்ப்பது என்பது அடிப்படையில் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று என்பதைத் மீண்டும் வலியுறுத்துகிறேன். தற்போது ஒரு மாநிலத்தில், அங்குள்ள காலச் சூழலுக்கேற்ப பின்பற்றப்பட்டு வரும் கொள்கைகளுக்கு எதிராக, அந்த மாநிலத்தைக் கட்டாயப்படுத்துவதற்கு, நிதி வழங்கும் விவகாரங்களில் ஒன்றிய அரசு அழுத்தம் தரும் இத்தகைய முயற்சி, கூட்டாட்சித் தத்துவத்தை அப்பட்டமாக மீறும் செயலாகும். குறிப்பிட்ட தேவைகளின் அடிப்படையில் தங்களது கல்விக் கொள்கைகளை வடிவமைக்கும் மாநிலங்களின் உரிமைகளை பெருமளவில் பாதிக்கும். தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வரும் இந்தத் திட்டத்தின்கீழ் நிதி விடுவிக்கப்படாததால், ஆசிரியர்கள் சம்பளம், மாணவர்களுக்கான நலத் திட்டங்களை உள்ளடக்கிய கல்வி முன்னெடுப்பு முயற்சிகள், கல்வி உரிமைச் சட்டத்தின்கீழ் பயிலும் வறிய நிலையில் வாழும் மாணவர்களுக்கான கல்வித் தொகையைத் திருப்பிச் செலுத்துதல் மற்றும் தொலைதூரப் பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கான போக்குவரத்து போன்றவற்றிற்கான பல முக்கிய பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது. கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையில், லட்சக்கணக்கான மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி, இந்த விஷயத்தில் இந்தியப் பிரதமர் தலையிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டுக்கு நிதி விடுவிக்கப்படாமல் உள்ளதால் ஏற்பட்டுள்ள வருந்தத்தக்க சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, தேசிய கல்விக் கொள்கை-2020-ஐ செயல்படுத்துவதோடு 'சமக்ர சிக்ஷா' திட்டத்தைப் பொருத்திப் பார்க்காமல், 2024-25 ஆம் நிதியாண்டில் இந்தத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டுக்கு வரவேண்டிய ரூ.2,152 கோடி நிதியினை உடனடியாக விடுவிக்க இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இப்பொருண்மையின் தீவிரத்தை உணர்ந்து, தனிப்பட்ட முறையில் தலையிட வேண்டும்" என்று வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

## குன்னூர் மேட்டுப்பாளையம் தேசிய நெடுஞ்சாலையில் சமவெளி பகுதியில் இருந்து வரக்கூடிய அரசு பேருந்து உட்பட அனைத்து வாகனங்களையும் வட்டார வளர்ச்சி அலுவலர் தலைமையிலான குழு கடும் சோதனை.



குன்னூர்: பிப்,21

நீலகிரி மாவட்டத்தில் பிளாஸ்டிக் பாட்டில்கள் பிளாஸ்டிக் கவர் போன்ற பிளாஸ்டிக் பொருட்கள் தடை செய்யப்பட்டுள்ள நிலையில் குன்னூர் மேட்டுப்பாளையம் சமவெளி பகுதியில் இருந்து வரக்கூடிய அரசு பேருந்தில் பயணிகள் பிளாஸ்டிக் பாட்டில்கள் கொண்டு வருகிறார்களா என்றும் சுற்றுலா வாகனங்கள் கார் இருசக்கர வாகனம் போன்றவற்றில் பிளாஸ்டிக் பாட்டில்கள் எடுத்து வரப்படுகிறது என்று சோதனை மேற்கொண்ட குன்னூர் வட்டார வளர்ச்சி அலுவலர் பிரேம்குமார் தலைமையிலான குழு சோதனை மேற்கொண்டது சோதனையில் பிளாஸ்டிக் பாட்டில்கள் கொண்டுவரப்பட்ட நபர்களுக்கு பாட்டில் ஒன்றுக்கு தல 100 ரூபாய் விதம் அபராதம் விதிக்கப்பட்டது. அதைப்போல் கனரக வாகனமான லாரிகளில் குடிநீருக்காக பிளாஸ்டிக் பாட்டில்கள் பயன்படுத்துகிறார்களா என பார்த்தபோது அவர்கள் விழிப்புணர்வு ஏற்படுத்துவது போல் பெரிய அளவில் கேன் வைத்து அதில் குடிநீர் பயன்படுத்தியது சோதனை ஈடுபட்ட அதிகாரிகள் லாரி ஓட்டுனரை பாராட்டக்கூடிய ஒரு விஷயமாக இருந்தது.

## தாராபுரம் 6வதுவார்டில் குடிநீர் குழாய் அடைப்பு உடனடியாக சரி செய்து கொடுத்த கவுன்சிலர் முபாரக் அலி பொதுமக்கள் பாராட்டு



தாராபுரம்: பிப்,21

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் நகராட்சி 6வது வார்டு கவுன்சிலராக முபாரக் அலி தொடர்ந்து இரண்டாவது முறையாக வெற்றி பெற்றார் இவர் அந்த பகுதியில் உள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளையும் குறைகளையும் உடனுக்குடனே செய்து தருவதில் சிறந்து விளங்குபவர் இந்நிலையில் இன்று ஆறாவது வார்டு பகுதியில் குடிநீர் குழாய் அடைப்பு என்பதை அறிந்த கவுன்சிலர் முபாரக் அலி உடனடியாக பணியாளர்களை வைத்து அடைப்பை சரி செய்து மக்களின் பயன்பாட்டுக்கு வழங்கினார் இதனால் அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி அடைந்து அவரின் செயலை பாராட்டி வருகின்றனர்.

## டெல்லியின் முதலமைச்சராக திருமதி.ரேகா குப்தா ஒருமனதாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள்.



டெல்லி: பிப்,21

முன்னாள் மாணவர் தலைவரான ரேகா குப்தா, நீண்ட அரசியல் வாழ்க்கையைக் கொண்ட ஒரு அனுபவம் வாய்ந்த பாஜக தலைவர். தற்போது டெல்லி பாஜகவின் பொதுச் செயலாளராகப் பணியாற்றி வரும் 50 வயதான இவர், முன்பு பாஜகவின் மகிளா மோர்ச்சாவின் தேசிய துணைத் தலைவராக இருந்துள்ளார். 2025 டெல்லி சட்டமன்றத் தேர்தலில் ஷாலிமார் பாக் (வடமேற்கு) தொகுதியில் 68,200 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். வழக்கறிஞரான குப்தா, 1996 முதல் 1997 வரை ABVP சார்பாக டெல்லி பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் (DUSU) தலைவராக தனது அரசியல் பயணத்தைத் தொடங்கினார். பின்னர் அவர் நகராட்சி அரசியலில் நுழைந்தார், 2007 இல் உத்தரி பிதம்புராவில் (வார்டு 54) இருந்து டெல்லி கவுன்சிலர் தேர்தலில் வெற்றி பெற்று 2012 இல் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். தெற்கு டெல்லி மாநகராட்சியின் மேயராகவும் பணியாற்றி, தனது நிர்வாகச் சான்றுகளை மேலும் வலுப்படுத்தியுள்ளார். டெல்லியின் 9 வது முதல்வராக பதவியேற்க உள்ள திருமதி.ரேகா குப்தா அவர்களின் தேசப்பணி சிறக்க தின கனி பத்திரிகை சார்பாக வாழ்த்துக்கள்.

# மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல்ஹாசனுடன் முத்தரசன் சந்திப்பு



சென்னை, பிப்.21

மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல்ஹாசன் அமெரிக்காவில் சினிமா தொடர்பான ஏ.ஐ. படிப்பை முடித்து விட்டு சமீபத்தில் சென்னை திரும்பினார். இதன் பின்னர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் சேகர்பாபு ஆகியோர் சந்தித்து பேசினார்கள். தி.மு.க. சார்பில் கமல்ஹாசன் விரைவில் மேல்சபை எம்.பி.யாக உள்ள நிலையில் இந்த சந்திப்பு நடைபெற்றதாக கூறப்பட்டது.

இந்த நிலையில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாநில செயலாளரான முத்தரசன் ஆழ்வார்பேட்டையில் உள்ள மக்கள் நீதி மய்யம் அலுவலகத்தில் கட்சி தலைவர் கமல்ஹாசனை சந்தித்து பேசினார். மரியாதை நிமித்தமாக இந்த சந்திப்பு 30 நிமிடங்கள் வரை நடைபெற்றது.

இந்த சந்திப்பின்போது மக்கள் நீதி மய்யம் கட்சியின் பொதுச் செயலாளர் அருணாச்சலம் உடனிருந்தார்.

வருகிற 21ந்தேதி மக்கள் நீதி மய்யத்தின் 8ம் ஆண்டு தொடக்க விழா கட்சி அலுவலகத்தில் நடைபெறுகிறது. இதில் கமல்ஹாசன் பங்கேற்று கொடியேற்றி வைத்து நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுக்கு இனிப்புகளை வழங்குகிறார்.

# வரும் 25ந்தேதி தமிழக அமைச்சரவை கூட்டம்

சென்னை, பிப்.21

தமிழக சட்டசபையில் மார்ச் 14ந்தேதி 2025 2026ம் நிதியாண்டிற்கான பட்ஜெட்டை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்கிறார். அதனை தொடர்ந்து மார்ச் 15ந்தேதி வேளாண் நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்படுவதாக சபாநாயகர் அப்பாவு தெரிவித்து இருந்தார். இதனை தொடர்ந்து, 202526ம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசு நிதி நிலை தயாரிப்பு தொடர்பாக நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் பல்வேறு துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் துறை சார்ந்தவர்களுடன் ஆலோசனை கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் கூட்ட அரங்கில் நடைபெற்று வருகிறது.

நேற்றைய ஆலோசனை கூட்டத்தை தொடர்ந்து சமூக நலத்துறை, குழந்தைகள் பாதுகாப்பு, ஆதிதிராவிடர், பழங்குடியினர், சிறுபான்மையினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்ப ட்டோர், இந்து சமய அறநிலையத் துறை, சுற்றுச்சூழல், மாற்றுத்திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவர் ஆகிய துறைகளைச் சேர்ந்த அமைச்சர்கள் அதிகாரிகள் மற்றும் அந்த துறைகளைச் சார்ந்தவர்கள் ஆகியோருடன் நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆய்வு மேற்கொண்டார். அவர்களின் கருத்துகளை கேட்டறிந்தார். இந்த நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தமிழக அமைச்சரவை கூட்டம் வரும் 25ந்தேதி நண்பகல் 12 மணி அளவில் கூடுகிறது. அமைச்சரவை கூட்டத்தில் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட வேண்டிய முக்கிய அறிவிப்புகள் தொடர்பாக ஆலோசனை நடத்தப்படுகிறது.

# இந்தியாவில் பாலியல் வன்கொடுமைகள் அதிகம் நடக்கும் மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றிய தி.மு.க. ஓ.பி.எஸ். கடும் கண்டனம்



சென்னை. பிப்.21

முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில், மனிதனை விலங்கினின்று வேறுபடுத்திக் காட்டுவது ஒழுக்கமே என்று சொன்னால் அது மிகையாகாது. 'ஒழுக்கம் விழுப்பம் தரும்', 'ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை' போன்ற சான்றோர் வாக்குகள் இதனை உறுதிப்படுத்துகின்றன. உலகப் பொதுமறையாம் திருக்குறளில் ஒழுக்கமுடைமை, அறன் வலியுறுத்தல், சான்றாண்மை போன்ற அதிகாரங்களில் ஒழுக்கத்தை வலியுறுத்தி இருக்கிறார் திருவள்ளுவர். ஆனால், ஒழுக்கம் என்றால் என்ன விலை? என்று கேட்கக்கூடிய அவல நிலை தமிழ்நாட்டில் தற்போது நிலவுகிறது.

கோவையை சேர்ந்த 17 வயது சிறுமி எழு கல்லூரி மாணவர்களால் கூட்டு பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகியுள்ள நிலையில், நேற்று திருப்பூர் மாவட்டத்தில், சொந்த மாநிலமான ஒடிசாவிற்கு செல்வதற்காக கணவன் மற்றும் குழந்தையுடன் பேருந்து நிலையத்தில் காத்திருந்தவர்களை, பனியன் கம்பெனியில் வேலை வாங்கித் தருவதாக நம்பிக்கை வார்த்தைக்கூறி அவர்களது வீட்டிற்கு அழைத்துச் சென்று கத்தி முனையில் அந்தப் பெண்ணை மிரட்டி, அவரது கணவர் மற்றும் குழந்தை கண் முன்னே மூன்று வட மாநில வாலிபர்கள் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர்.

மேற்படி சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் புகார் தெரிவிக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டாலும், பாலியல் வன்கொடுமை என்பது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. ஆசிரியர்களே மாணவியரை வன்கொடுமை செய்யும் கொடுமைகள் தமிழ்நாட்டில் ஆங்காங்கே நடந்து கொண்டிருக்கின்றன. இதுபோன்ற பாலியல் வன்கொடுமைகளுக்குக் காரணமாக விளங்குவது ஒழுக்கமின்மை. இந்த ஒழுக்கமின்மைக்கு முக்கியக் காரணம் அமோக மது விற்பனையும், அளவுக்கு அதிகமான போதைப் பொருட்கள் நடமாட்டமும் தான். மது விற்பனை படிப்படியாக குறைக்கப்படும் என்று சொல்லிக் கொண்டு மதுவை ஊக்குவிக்கின்ற அரசாக தி.மு.க. அரசு விளங்கிக் கொண்டிருக்கிறது. மது விலக்குத் துறையை மது ஊக்குவிப்புத் துறையாக தி.மு.க. அரசு மாற்றிவிட்டது. இது தவிர, போதைப் பொருட்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு நிறமையற்ற அரசாகவும் விளங்கிக் கொண்டிருக்கிறது.

தி.மு.க. அரசின் நிர்வாகத் திறமையின்மை காரணமாக, தமிழ்நாட்டு மக்களின் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத சூழ்நிலை நிலவுகிறது. மாணவ, மாணவியரின் எதிர்காலம் பாதிக்கப்படுகிறது. யார் எப்போது தாக்கப்படுவார்கள் என்று தெரியாத அலங்கோல நிலை தமிழ்நாட்டில் நிலவுகிறது. மக்களுக்கான பாதுகாப்பினை, குறிப்பாக பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய எவ்வித மான ஆக்கப்பூர்வமான நடவடிக்கையையும் தி.மு.க. அரசு எடுக்கவில்லை. பெண் காவலர்களே பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாகும் கொடூரம் தமிழ்நாட்டில் இருக்கிறது.

சட்டம் ஒழுங்கை தன் வசம் வைத்திருக்கும் முதலமைச்சர், இனியாவது பாராட்டு மழையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, கள யதார்த்தம் என்ன என்பதை கேட்டுத் தெரிந்து கொண்டு, தமிழ்நாட்டில் கொடிகட்டி பறந்து கொண்டிருக்கும் போதைப் பொருட்கள் நடமாட்டத்தை வேரோடு அழிக்கவும், மதுவிலக்கை நடைமுறைப்படுத்தவும், பாலியல் வன்கொடுமையாளர்கள்மீது பாரபட்சமின்றி உறுதியான நடவடிக்கை எடுக்கவும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.



உங்களைத்தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் கலெக்டர் கிறிஸ்துராஜ் திருப்பூர் மாவட்டம் தாராபுரம் வட்டம் குண்டம் ஊராட்சி ஒன்றியம் க்ண்ணாங்கோவில் ஊராட்சி உ.ஆலாம்பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் காலை உணவு திட்டத்தின் கீழ் பள்ளி மாணவ, மாணவியர்களுடன் உணவருந்தி ஆய்வு மேற்கொண்டார். உடன் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் பெலிக்ஸ்ராஜா உள்ளார்.

# ராமேசுவரம் மீனவர்கள் 12 பேர் நிபந்தனையுடன் விடுதலை படகோட்டிக்கு ரூ.1.20 கோடி அபராதம்



மண்டபம், பிப்.21

ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரம் துறைமுகத்தில் இருந்து கடந்த 8ந்தேதி 350க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் 3 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்க சென்றனர். நள்ளிரவில் சுமார் 20 விசைப்படகுகளை சேர்ந்த மீனவர்கள் இந்திய கடல் எல்லையான கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டு இருந்தனர்.

அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டியதாக ஜான் போஸ் மற்றும் சுதன் ஆகியோருக்கு சொந்தமான இரண்டு விசைப்படகுகளை பறிமுதல் செய்தனர். அந்த படகுகளில் இருந்த ஜான் போஸ் (வயது 39), அந்தோணி இஸ்ரோஸ் (20), நிலாகரன் (44), அந்தோணி ஆரோன் உள்பட 14 மீனவர்களையும் சிறைபிடித்தனர்.

பின்னர் அங்குள்ள கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்ட மீனவர்கள் 14 பேரையும் காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டதையடுத்து, அனைவரும் யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டனர். காவல் முடிந்ததை தொடர்ந்து இன்று மீண்டும் அந்த மீனவர்கள் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி, 14 பேரில் 12 மீனவர்களை அபராதத்துடன் விடுதலை செய்ய உத்தரவிட்டார். அதன்படி அவர்கள் அனைவரும் தலா ரூ.50 ஆயிரம் அபராதம் செலுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. மேலும் படகோட்டியான ஜான்போஸ் என்பவருக்கு அதிகபட்சமாக இலங்கை மதிப்பில் ரூ.1.20 கோடி அபராதம் விதிக்கப்பட்டது.

அதேபோல் இரண்டாவது முறையாக எல்லை தாண்டியதாக கைது செய்யப்பட்ட மீனவர் அந்தோணி ஆரோன் என்பவருக்கு 18 மாத சிறை தண்டனையும் விதித்து தீர்ப்பு அளிக்கப்பட்டது. கடந்த 2 மாதங்களில் மட்டும் 70க்கும் மேற்பட்ட ராமேசுவரம் மீனவர்கள் கைதாகி இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று முன் தினம் ராமேசுவரத்தில் கனிமொழி எம்.பி. தலைமையில் மத்திய அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடந்தது.

வருகிற 28ந்தேதி முதல் தமிழக மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி ராமேசுவரம் மீனவர்கள் காலவரையற்ற வேலைநிறுத்த போராட்டம் அறிவித்துள்ள நிலையில் கைதானவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது.



சேலம் அஸ்தம்பட்டி பகுதியில் நடந்த ஸ்ரீமாரியம்மன் திருவிழாவில் பசுமாட்டின் கொம்புகள் வழியே ஸ்ரீமாரியம்மன் தரிசனம்



தவெகதலைவர்விஜய், பொதுச்செயலாளர்என்.ஆனந்த்ஆகியோரின்அறிவுறுத்தலின்பேரில்கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தவெக சார்பில் நாகர்கோவிலில் மாவட்ட செயலாளர் எஸ்.ஆர். மாதவன் தலைமையில் நிர்வாகிகள் அஞ்சலை அம்மாள் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



அமைச்சர்கள் சாமிநாதன், கயல்விழி செல்வராஜ் ஆகியோர் தலைமையில் திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் அனைத்து துறை அலுவலர்களுடன் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.கலெக்டர்கிறிஸ்துராஜ், ஆணையாளர்கராமமூர்த்தி, மாவட்டவருவாய்அலுவலர்கார்த்திகேயன், ஊரக முகமையின் திட்ட இயக்குநர் மலர்விழி, இணை பதிவாளர் பிரபு மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

# தமிழகத்தில் கொலை கொள்ளை, பாலியல் போன்ற குற்றங்கள் குறித்தி செய்தியாளர்களுக்கு அமைச்சர் பேட்டி

நாகர்கோவில், பிப்.21

தமிழகத்தில் கொலை கொள்ளை, பாலியல் பலாத்காரங்கள் என தொடர்ந்து குற்றச்செயல்கள் அதிகரித்து வருகின்றன, 2026 ஆம் ஆண்டு இந்த அரசாங்கம் இருக்காது,



இந்த அரசாங்கம் மிகப் பெரிய தோல்வி அடையும், மக்கள் கொதித்துப் போயிருக்கிறார்கள், திமுக கூட்டணிக் கட்சியை சேர்ந்தவர்கள் அனைவரும் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்

ஆனால் ஒற்றைக்கருத்தில் மட்டும் ஒன்றுபட்டுள்ளனர் அது பாஜக வந்து விடக்கூடாது என்ற அந்த ஒற்றை கருத்துதான் அவர்களை ஒன்று படுத்துகிறது என கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகர பாஜக வடக்கு பகுதி சார்பாக பாஜக கொடி கம்பம் திறப்பு விழா நிகழ்வில்

கலந்து கொண்ட முன்னாள் மத்திய இணை அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் செய்தியாளர்களுக்கு பேட்டி.

# திண்டுக்கல்லில் நடைபெற்றுக் கொண்டிருந்த வழக்கறிஞர்கள் போராட்டம் வாபஸ்

திண்டுக்கல், பிப்.21

திண்டுக்கல் வழக்கறிஞர் சங்கம் சார்பில் நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்தில் அனைத்து வழக்கறிஞர்களும் கலந்து ஆலோசனை மேற்கொண்டு தற்போது நடைபெறும் அனைத்து போராட்டங்களைவாபஸ் பெறுவதாகவும். மேலும் தாக்கப்பட்ட வழக்கறிஞர் உதயகுமார் மீது போடப்பட்டுள்ள வழக்கை ரத்து செய்யும் வரை நீதிமன்ற புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடுவதாகவும் மேலும் சனிக்கிழமை மாலைக்குள் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வழக்கை ரத்து செய்ய பரிந்துரை செய்ய வேண்டும் என்று கோரிக்கையை விடுத்துள்ளனர் வழக்கறிஞர் சங்க தலைவர் குமரேசன் செயலாளர் கென்னடி இருவரும் கூட்டாக தெரிவித்தனர்



தமிழக வெற்றிக் கழகம் திருப்பூர் மேற்கு மாவட்ட செயலாளர்அண்ணன்GKசங்கர்அவர்கள்தலைமையில் நடைபெற்ற எங்கள் கொள்கை தலைவி மக்கள் சேவகர் அஞ்சலை அம்மாள் நினைவு தினம் அனுசரிப்பு நிகழ்ச்சில் தொண்டர் அணி சார்பாக கலந்துகொண்டபோது எடுத்த படம்.

# குடும்பத்தகராறில் 2 பிள்ளைகளை வெட்டிக்கொன்ற தந்தை



ஆத்தூர், பிப்.21

சேலம் மாவட்டம் ஆத்தூர் கெங்கவல்லி அருகே உள்ள 74. கிருஷ்ணாபுரத்தில் வசித்து வருபவர் அசோக்குமார் (வயது 42). இவரது மனைவி தவமணி (38). இவர்களுக்குவித்யதாரணி (13), அருள்குமாரி (12), ஆகிய 2 பெண் குழந்தைகளும், அருள் பிரகாஷ் (5) என்ற மகனும் உள்ளனர்.

அசோக்குமார் கடலூர் மாவட்டம் நெய்வேலியில் ஆட்டோ டிரைவராக பணிபுரிந்து வருகிறார். இந்த நிலையில் கணவன், மனைவிக்கு இடையே அடிக்கடி குடும்ப தகராறு ஏற்பட்டு வந்தது.

நேற்று நெய்வேலியில் இருந்து வீட்டுக்கு வந்த அசோக்குமார் மனைவியுடன் தகராறு செய்தார். இன்று அதிகாலை வேளையில் மனைவி தவமணி, குழந்தைகள் வித்யதாரணி, அருள்குமாரி, அருள் பிரகாஷ் ஆகியோர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தனர். அப்போது குடிபோதையில் இருந்த அசோக்குமார் அவர்களை கண்மூடித்தனமாக வெட்டினார். இதனால் அதிர்ச்சி அடைந்த தவமணி மற்றும் குழந்தைகள் அப்பா விட்டு விடுங்கள்... அப்பா விட்டு விடுங்கள்... என கெஞ்சினர். ஆனால் அசோக்குமார் கோபத்தில் மனைவி மற்றும் தனது குழந்தைகளை கொடூரமாக வெட்டினார். தன் கண் முன்னே கணவர், குழந்தைகளை வெட்டுவதை பார்த்து தவமணி கதறி அழுதார். அப்போது குழந்தைளும் அம்மா, அம்மா என கதறி அழுதது.

அசோக்குமாரை தவமணி தடுக்க முயன்றார். அவரையும் சரமாரியாக வெட்டினார். கணவரிடம் இருந்து உயிர்பிழைக்க தனது குழந்தைகளுடன் தவமணி தப்பி ஓட முயன்றார். ஆனால் அசோக்குமார் விரட்டி விரட்டி அவர்களை வெட்டினார். இதில் தவமணி, குழந்தைகள் வித்யதாரணி, அருள்குமாரி, அருள் பிரகாஷ் ஆகிய 4 பேரும் வெட்டு காயங்களுடன் வீட்டில் ஆங்காங்கே சுருண்டு விழுந்தனர்.

4 பேரும் ரத்த வெள்ளத்தில் கிடப்பதாக தவமணியின் பெற்றோருக்கு தகவல் கிடைத்தது. இதைக்கேட்டு கதறியபடி பெற்றோர் மற்றும் உறவினர்கள் அங்கு விரைந்து வந்து பார்த்து கதறி அழுதனர்.

அரிவாள் வெட்டில் மகள் வித்யதாரணி, மகன் அருள் பிரகாஷ் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளது தெரிய வந்தது. தாய் தவமணி மற்றும் மகள் அருள்குமாரி ஆகியோர் படுகாயங்களுடன் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தனர். இருவரையும் மீட்டு ஆத்தூர் அரசு ஆஸ்பத்திரிக்கு உறவினர்கள் கொண்டு சென்றனர். அங்கு தாய் மற்றும் மகளுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த சம்பவம் குறித்து தகவல் கிடைத்தும் ஆத்தூர் துணை போலீஸ் சூப்பிரண்டு சதீஸ்குமார் மற்றும் கெங்கவல்லி போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று குழந்தைகள் வித்யதாரணி, அருள் பிரகாஷ் ஆகியோர் உடல்களை மீட்டு அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

இதையடுத்து போலீசார் இந்த கொலையை செய்த அசோக்குமாரை பிடித்து சென்று போலீஸ் நிலையத்தில் வைத்து தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள்.

முதற்கட்ட விசாரணையில், அசோக்குமாருக்கு மது குடிக்கும் பழக்கம் உள்ளது. இவர் கடந்த 6 ஆண்டுகளாக நெய்வேலியில் தனியாக வசித்து வருகிறார். ஆட்டோ ஓட்டுவதில் கிடைக்கும் வருமானத்தை மது குடித்து செலவழித்து வந்தார். குடும்ப செலவுக்கு பணம் கொடுப்பதில்லை. இதனால் தவமணிக்கும், அசோக்குமாருக்கும் இடையே தகராறு ஏற்பட்டு வந்தது.

கணவர் குடும்ப செலவுக்கு பணம் கொடுக்காததால் தவமணி தனது குழந்தைகளை கூலி வேலைக்கு சென்று அதில் கிடைக்கும் பணத்தில் 3 குழந்தைகளையும் கஷ்டப்பட்டு வளர்த்து வந்தார். இந்த நிலையில் அசோக்குமார் குடிபோதையில் வீட்டுக்கு வந்து அதிகாலை நேரத்தில் தூங்கி கொண்டிருந்த மனைவி மற்றும் குழந்தைகளை வெட்டி சாய்த்துள்ளார் என்பது தெரியவந்தது. தொடர்ந்து அசோக்குமார் தலையில் காயம் ஏற்பட்டதாக கெங்கவல்லி அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. ஆஸ்பத்திரியில் சிகிச்சை முடிந்து அவரை கைது செய்ய போலீசார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். மேலும் கொலைக்கான காரணம் குறித்தும் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# தமிழகம் முழுவதும் அரசு பள்ளிகளில் 1ந்தேதி முதல் மாணவர் சேர்க்கை தொடங்குகிறது



சென்னை, பிப்.21

தமிழகம் முழுவதும் அரசு பள்ளிகளில் 2025 2026ம் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை வருகிற 1ந்தேதி முதல் தொடங்குகிறது. இதற்கான உத்தரவை தொடக்க கல்வி இயக்குநர் நரேஷ் பிறப்பித்து உள்ளார்.

இதுதொடர்பாக அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்கள், வட்டார கல்வி அலுவலர்கள், அனைத்துபள்ளிதலைமை ஆசிரியர்களுக்கு அவர் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறி இருப்பதாவது:

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், 2025 2026ம் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை பணிகளை ஒவ்வொரு பள்ளியிலும் மார்ச் 1ந்தேதி முதல் தொடங்க வேண்டும். இதற்காக அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வட்டாரகல்வி அலுவலர்கள் மூலம் உரிய அறிவுரைகள் வழங்கிட அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்கள் அறிவுறுத்த வேண்டும்.

தமிழ்நாட்டில் ஊரக பகுதிகளில் அமைந்துள்ள அங்கன்வாடி மையங்களில் முன்பருவ கல்வியை நிறைவு செய்யும் 5 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளை அந்தந்த பகுதிகளில் உள்ள அரசு பள்ளிகளில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

வட்டார கல்வி அலுவலர்கள், பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள், பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், இல்லம் தேடி கல்வி தன்னார்வலர்கள் ஆகியோர் இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

அங்கன்வாடி மையங்கள் அல்லாது வேறு பள்ளிகளில் இருந்து முதல் வகுப்போ அல்லது பிற வகுப்புகளிலோ அரசு பள்ளிகளில் சேர விரும்பும் மாணவர்களுக்கு சேர்க்கைக்கான இடங்களை பள்ளிகள் வழங்க, வட்டார கல்வி அலுவலர்கள் மூலம் அனைத்துபள்ளிதலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

அரசு பள்ளிகளில் கிடைக்கும் சேவைகள், நலத்திட்டங்கள் மற்றும் பல்வேறு உதவி தொகைகள் குறித்த விழிப்புணர்வை பொது மக்கள் மற்றும் மாணவர்களுக்கு எடுத்துரைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அங்கன்வாடி மையங்களில் இருந்து வெளிவரும் குழந்தைகளில் ஒருவர் கூட விடுபடாமல் அனைவரையும் அரசு பள்ளிகளில் சேர்க்கை பெற வைக்க வேண்டும்.

20252026ம் கல்வியாண்டில் மாணவர் சேர்க்கை விகிதத்தினை கணிசமான அளவில் உயர்த்திட பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், அரசு பள்ளிகளில் சேர்க்கப்படும் மாணவர் விவரங்களை கல்வி தகவல் மேலாண்மை முறைமை இணையதளத்தில் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யவும் அறிவுறுத்த வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தாராபுரம் அருகே உள்ள கவுண்டச்சிபுத்தூர் மற்றும் நஞ்சையும் பாளையம் ஊராட்சியைச் சேர்ந்த 400க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரை முற்றுகையிட்டதால் பெறும் பரபரப்பு

தாராபுரம், பிப் 21

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அருகே உள்ள கவுண்டச்சிபுதுர் மற்றும் நஞ்சியம்பாளையம் ஆகிய ஊராட்சியைச் சேர்ந்த பொதுமக்கள் இன்று இரண்டாம் கட்டமாக 2 ஊராட்சிகளையும் நகராட்சியுடன் இணைக்க கூடாது என வலியுறுத்தி மாவட்ட ஆட்சித் தலைவர் கிறிஸ்துராஜ் அவர்களிடம் மனு அளித்தனர்.

மேலும் உங்களை தேடி உங்கள் ஊரில் முகாம் இன்று தாராபுரம் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள பல்வேறு பகுதிகளில் ஆய்வு பணியை மேற்கொள்வதற்காக திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் கிறிஸ்துராஜ் வருகை புரிந்தார்.

இதனைஅறிந்தஇரண்டு கிராம ஊராட்சி சேர்ந்த பொதுமக்கள் 400க்கும் மேற்பட்டோர் பேருந்து நிலையத்திலிருந்து ஊர்வலமாக கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று கொண்டிருந்த போது ஆய்வு பணிக்காக வருகை புரிந்த திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிறிஸ்துராஜ் முற்றுகையிட்டனர், அவர்களிடம் இரண்டு ஊராட்சிகளை தாராபுரம் நகராட்சியுடன் இணைக்க கூடாது என வலியுறுத்தி கோஷங்களை எழுப்பியவாறு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கோரிக்கை மனு அளித்தனர்.

மாவட்ட ஆட்சியரை முற்றுகையிட்டதால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது..

# பாகிஸ்தான்: பஸ் மீது துப்பாக்கி சூடு தாக்குதல் - 7 பேர் பலி




லாகூர், பிப்.21

பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணம் குவாட்டா நகரில் இருந்து இன்று பஞ்சாப் மாகாணத்திற்கு பஸ் சென்றுகொண்டிருந்தது.


பலூசிஸ்தானின் பர்ஹன் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது ஆயுதமேந்திய கும்பல் பஸ்சை இடைமறித்தது.

பஸ்சில் இருந்த பயணிகளை கீழே இறக்கிய அந்த கும்பல் அடையாள அட்டைகளை சோதித்தது.

அதில், 7 பயணிகள் பஞ்சாப்பை சேர்ந்தவர்கள் என தெரிந்ததும் அவர்களை சரமாரியாக துப்பாக்கியால் சுட்டுக்கொன்றது.

தகவலறிந்து விரைந்து வந்த போலீசார், 7 பேரின் உடல்களையும் மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோவிலில் சிவராத்திரி திருவிழா: 26ம் தேதி தேரோட்டம்



ராமேஸ்வரம், பிப்.21

ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோவிலில் ஆண்டுதோறும் மாசி மகாசிவராத்திரி திருவிழா மற்றும் ஆடித்திருக்கல்யாண திருவிழா சிறப்பாக நடைபெறும். அவ்வகையில் இந்த ஆண்டுக்கான மாசி மகா சிவராத்திரி திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

விழாவில் 2ம் நாளான இன்று காலை சுவாமிஅம்பாள் தங்க கேடயத்தில் எழுந்தருளி மாட வீதிகளில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தனர். இரவில் வெள்ளி கற்பக விருட்ச வாகனத்திலும், அம்பாள் தங்க காமதேனு வாகனத்திலும் எழுந்தருளி வீதி உலா வரும் நிகழ்ச்சி நடக்கிறது.

3ம் நாளான நாளை (வியாழக்கிழமை) அதிகாலை 4 மணிக்கு சுவாமி அம்பாள் தங்க கேடயத்தில் பஞ்சமூர்த்திகளுடன் எழுந்தருளி வீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. தொடர்ந்து காலை 6 மணிக்கு மேல் சுவாமி வெள்ளி பூத வாகனத்திலும், அம்பாள் வெள்ளி கிளி வாகனத்திலும் கெந்தமாதன பர்வதம் (ராமர் பாதம்) மண்டகப்படிக்கு செல்கிறார்கள். அங்கு பல்வேறு பூஜைகள் நடைபெறுகின்றன.

வாகன உற்சவத்தை முன்னிட்டு, நாளை அதிகாலை 3.30 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டு 4.30 மணி வரை ஸ்படிகலிங்க தரிசனம் நடைபெற்று தொடர்ந்து, மற்ற கால பூஜைகள் நடைபெறுகின்றன. பின்னர் காலை 6 மணிக்கு மேல் நடை சாத்தப்பட்டு இரவு வரையிலும் கோவிலில் உள்ள தீர்த்த கிணறுகளில் நீராடவும் சாமி தரிசனம் செய்யவும் பக்தர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று கோவில் இணை ஆணையர் சிவராம்குமார் தெரிவித்துள்ளார்.

திருவிழாவின், 9ம் நாளான வருகிற 26ம்தேதி சிவராத்திரி அன்று சுவாமி அம்பாள் தேரோட்டம் நடைபெறுகிறது. 10ம் நாளான வருகிற 27ம் தேதி அன்று சாமி அம்பாள் தங்க ரிஷப வாகனத்தில் அக்னி தீர்த்த கடற்கரைக்கு தீர்த்த வாரி பூஜைக்கு எழுந்தருளும் நிகழ்ச்சி நடக்கிறது. மார்ச் 1ம் தேதி அன்று சண்டிகேசுவரர் வீதி உலாவுடன் திருவிழா நிறைவு பெறுகிறது.

# ஆஸ்திரேலியாவில் கரை ஒதுங்கிய 150 திமிங்கலங்கள்; கருணை கொலை செய்ய முடிவு



தாஸ்மானியா, பிப்.21

ஆஸ்திரேலியாவின் தீவு மாகாணங்களில் ஒன்றான தாஸ்மானியாவின் வடமேற்கு கடற்கரையோர பகுதியில், 150க்கும் மேற்பட்ட திமிங்கலங்கள் நேற்று மதியம் கரையொதுங்கின. இதனை தொடர்ந்து, இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுச்சூழல் துறையினர் அந்த பகுதிக்கு சென்று அவற்றை கடலுக்குள் மீண்டும் கொண்டு சென்று விடும் பணியில் ஈடுபட்டனர்.

எனினும், வானிலை மோசமடைந்த நிலையில் அவற்றை கடலில் விடும் பணியில் தொய்வு ஏற்பட்டு உள்ளது. அடுத்த 2 நாட்களுக்கு இதே வானிலை நீடிக்கும் என கூறப்படுகிறது. இந்நிலையில், அவற்றில் 90 திமிங்கலங்களே இன்று உயிருடன் உள்ளன என தெரிகிறது.

உருவத்தில் திமிங்கலங்களை போன்று காணப்பட்டாலும், இவை டால்பின் குடும்பத்தில் வருபவை. 3 ஆயிரம் கிலோ எடையுடன்,

பொதுவாக கடற்கரையில் இருந்து சற்று உள்ளடங்கிய பகுதியில், கடலின் ஆழத்தில் வசிப்பவை. இந்த திமிங்கலங்கள் கடற்கரைக்கு வந்ததற்கான காரணம் சரிவர தெரியவில்லை. இவற்றை காப்பாற்ற முடியாத மற்றும் கடலுக்குள் திருப்பி விட முடியாத சூழலில், கடைசியாக அவற்றை கருணை கொலை செய்யும் முடிவு எடுக்கப்படும்.

பொதுவாக தாஸ்மானியா பகுதியில், பைலட் வகை திமிங்கலங்கள் இது போன்று அதிக அளவில் கடந்த காலங்களில் கரையொதுங்கின. இந்நிலையில், 1974ம் ஆண்டுக்கு பின்னர் முதன்முறையாக இவ்வகை திமிங்கலங்கள் கரை ஒதுங்கியுள்ளன.

தாஸ்மானியாவின் மேற்கு கடலோரம் மேக்குவாரி ஹார்பர் பகுதியில், கடந்த 2022ம் ஆண்டு 200 முதல் 230 பைலட் வகை திமிங்கலங்கள் கரை ஒதுங்கின. அவை பின்னர் உயிரிழந்தன. இதே பகுதியில், 2020ம் ஆண்டு 470 பைலட் திமிங்கலங்கள் கரை ஒதுங்கின. அப்போது, 100க்கும் குறைவான திமிங்கலங்களே காப்பாற்றப்பட்டன.

# தமிழ்நாடு லோக் ஆயுக்தா தலைவராக ஓய்வு பெற்ற நீதிபதி நியமனம்



சென்னை, பிப்.21

லோக் ஆயுக்தா அமைப்பின் தலைவர் மற்றும் இரண்டு உறுப்பினர்களை, தமிழக அரசு நியமனம் செய்துள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசிதழில் வெளியிடப்பட்ட மனித வள மேம்பாட்டுத்துறையின் அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு லோக் ஆயுக்தா அமைப்புக்கு தலைவராக சென்னை ஐகோர்ட்டு ஓய்வு பெற்ற நீதிபதி பி.ராஜமாணிக்கத்தை நியமித்து கவர்னர் உத்தரவிட்டுள்ளார். மேலும் நீதி சாராத 2 உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி மாவட்ட நுகர்வோர் குறைதீர்ப்பு கமிஷனின் தலைவர் வி.ராமராஜ் (நாமக்கல்) மற்றும் வருமான வரிகள் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் முன்னாள் உறுப்பினர் ஆறுமுக மோகன் அலங்காமணி ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த அமைப்பின் தலைவர் 17.4.2027 வரை இந்த பதவியை வகிப்பார். மற்ற 2 உறுப்பினர்கள் தங்கள் 70 வயது வரையிலோ அல்லது 5 ஆண்டுகள் வரையிலோ, இதில் எது முதலில் வருகிறதோ? அதுவரையில் பதவியில் நீடிப்பார்கள்.

லோக் ஆயுக்தா தலைவராக நியமிக்கப்பட்டுள்ள நீதிபதி ராஜமாணிக்கம் 31.5.1959ம் ஆண்டு பிறந்தவர். 1983ம் ஆண்டு வக்கீலாக பணியை தொடங்கி மாவட்ட முனிசீப்பாக நீதிமன்றத்தில் பதவி பெற்றார். அதன் பின்னர் மாவட்ட நீதிபதி, மாவட்ட தலைமை நீதிபதி என படிப்படியாக பதவி உயர்வு பெற்றார். 2016ம் ஆண்டு சென்னை ஐகோர்ட்டு பதிவாளராக பதவியேற்ற அவர் அடுத்த ஆண்டில் (2017) சென்னை ஐகோர்ட்டு நீதிபதி ஆனார். 30.5.2021 அன்று நீதிபதி பதவியில் இருந்து ஓய்வு பெற்றார். அதன்பின்னர் தமிழ்நாடு லோக் ஆயுக்தாவின் நீதி பிரிவு உறுப்பினராக 18.4.2022 முதல் 19.8. 2024 வரை பணியாற்றினார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ரெயிலுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த நபர் கைதானதும் சொன்னதை மறக்கவே மாட்டீங்க




சென்னை, பிப்.21

சென்னையில் இருந்து ராமேஸ்வரம் சென்ற சேது எக்ஸ்பிரஸ் ரெயிலில் வெடிகுண்டு இருப்பதாக மிரட்டல் விடுத்த இளைஞரை போலீசார் கைது செய்துள்ளனர்.

கைதான தண்டாயுதபாணி என்பவரிடம் போலீசார் விசாரணை நடத்தினர்.

இளைஞர் முன்பதிவில்லா டிக்கெட் வாங்கிக்கொண்டு தூங்குவதற்காக முன்பதிவு பெட்டிக்கு சென்றுள்ளார்.

அங்கு கூட்டம் அதிகமாக இருந்ததாலும், தூங்கவிடாமல் பயணிகள் தொந்தரவு செய்ததாலும் எரிச்சல் அடைந்து ரெயிலில் வெடிகுண்டு இருப்பதாக போலீசாருக்கு போன் மூலம் மிரட்டல் விடுத்தது தெரிய வந்தது.

இதையடுத்து மதுபோதையில் இருந்த அவரை போலீசார் கைது செய்தனர்.

# பொன்னேரி அருகே 7ம் வகுப்பு மாணவி தூக்குப்போட்டு தற்கொலை

திருவள்ளூர், பிப்.21

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி அடுத்த அகரம் கிராமம், எல்லையம்மன் கோவில் தெருவில் வசிப்பவர் ராஜசேகர் (35 வயது). இவரது மகள் தமிழ்ச்செல்வி (12 வயது). பள்ளிபாளையம் கிராமத்தில் உள்ள அரசு நிதி பெறும் பள்ளியில் 7ம் வகுப்பு படித்து வந்தார்.

பள்ளிக்கு சென்று விட்டு வீட்டுக்கு வந்த தமிழ்ச்செல்வி யாரிடமும் பேசாமல் வீட்டில் உள்ள படுக்கை அறைக்கு சென்று கதவை பூட்டிக்கொண்டார். நீண்ட நேரம் ஆகியும் தமிழ்ச்செல்வி கதவை திறக்காததால் சந்தேகமடைந்த அவரது தாய் கதவை தட்டினார். உள்ளே இருந்து எந்த சத்தமும் வராததால் பரிதவித்து போன தாய் ஜன்னல் வழியாக எட்டி பார்த்தார்.

அப்போது மாணவி தமிழ்ச்செல்வி மின்விசிறியில் தூக்கிட்டதை கண்டு அதிர்ச்சியடைந்தார். உடனே அக்கம்பக்கத்தினர் உதவியுடன் கதவை உடைத்து உயிருக்கு போராடிய தமிழ்ச்செல்வியை மீட்டு தேவம்பட்டு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கொண்டு சென்றார்.

அங்குமுதலுதவிசிகிச்சை அளிக்கப்பட்டு மேல்சிகிச்சைக்காக கும்மிடிப்பூண்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்ற நிலையில் வழியிலேயே இறந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். இது குறித்து திருப்பாலைவனம் போலீசார் வழக்குப்பதிவு விசாரணை நடத்தினர்.

முதற்கட்ட விசாரணையில் மாணவி தமிழ்ச்செல்வி பெற்றோரிடம் செல்போன் கேட்டதாகவும், அதை வாங்கி கொடுக்க பெற்றோர் மறுத்ததாகவும் கூறப்படுகிறது. இதனால் மனவிரக்தியில் மாணவிதற்கொலைசெய்து கொண்டாரா? அல்லது வேறு ஏதும் காரணமா என போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# விளைநிலங்களில் கொட்டப்பட்ட கெமிக்கல் கழிவுகள்.. இரவில் தீப்பற்றி எரிந்ததால் பரபரப்பு



நாமக்கல், பிப்.21

நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையத்தில் விவசாய நிலத்தில் காலாவதியான ரசாயனங்களை மர்மநபர்கள் கொட்டி சென்றுள்ளனர். 20 பேரல்களில் காலாவதியான ரசாயனங்களை கொட்டி சென்றுள்ளனர்.

அதிக திறன் கொண்ட கெமிக்கல் கழிவுகள் இரவில் திடீரென தீப்பற்றி எரிந்ததால் ஊர் முழுவதும் புகை சூழ்ந்தது.

இதனால் மக்களுக்கு கண் எரிச்சல் ஏற்பட்டது. மூச்சு விடுவதில் சிரமப்பட்டனர்.

கெமிக்கல் பாக்ஸ் மற்றும் கெமிக்கல் பேரல்களை விவசாய நிலங்களில் கொட்டி சென்றுள்ளதாகவும் ரசாயனங்களை கொட்டி சென்றது யார் என்று தெரியவில்லை என்றும் மக்கள் தெரிவித்தனர்.

# மூளை அனியுரிசம் கட்டி வெடித்து இருந்த கைக்குழந்தைக்கு மிகச்சிக்கலான நியூரோ எண்டோவாஸ்குலர் அறுவை சிகிச்சை




மதுரை: பிப்,21 தென் தமிழகத்தின் நரம்பியல் மற்றும் விபந்து சிகிச்சைக்கு பலராலும் பரிந்துரைக்கப்படும் முன்னணி மருத்துவமனையான ஹானா ஜோசப் மருத்துவமனையின் மருத்துவர்கள், 9 மாத ஆண் கைக்குழந்தைக்கு முளை அணியுரிசம் (Brain Aneurysm) கட்டி வெடித்து இருப்பதை ஆஞ்சியோகிராம் (Angiogram) மூலம் கண்டறிந்து அக்குழந்தைக்கு மிகச்சிலான உயிர் காக்கும் நியூரோ எண்டோவாஸ்குலர் (Neuroendovascular) அறுவை சிகிச்சையை பலூன் அசிஸ்ட்ட் காயில் (Balloon-Assisted Colls) மூலம் வெற்றிகரமாக செய்து சாதனை புரிந்துள்ளnt. இது மதுரையில் செய்யப்பட்ட மிக அரிதான சிகிச்சைகளில் ஒன்று. மேலும் உலக அளவில் மிகச் சில மருத்துவமனைகளில் மட்டுமே, இத்தகைய அறுவை சிகிச்சைகள் கைக்குழந்தைகளுக்கு செய்யப்பட்டுள்ளதாக பதிவிடப்பட்டுள்ளது

மதுரை ஹானா ஜோசப் மருத்துவமனையின் சேர்மன் மற்றும் மேலாண்மை இயக்குனர் டாக்டர் எம்.ஜே அருண் குமார் செய்தியாளர்களிடம் பேசும் போது. “மூளை அனியுரிசம் (Brain Aneurysm) கட்டி என்பது இரத்தக்குழாயில் ஏற்படும் ஒரு வீக்கம். இது மெதுவாக பெரிதாகி, இறுதியில் தலையின் உட்புறம் வெடித்து உயிருக்கு ஆபத்தான கடுமையான ரத்தக் கசிவை ஏற்படுத்தக் கூடும். குழந்தைகளின் மூளையில் அனியுரிசம் (Brain Aneurysm) கட்டி ஏற்படுவது 0.5% முதல் 4.6 % வரை இருக்கலாம். ஆனால் ஒரு வயதுக்கு குறைவான குழந்தைகளிடம், இது மிகவும் அபூர்வமாக காணப்படுகிறது. உலக அளவில் இது 0.01% முதல் 0.09 % சதவீதம் மட்டுமே காணப்படுகிறது. இவ்வகை மூளை அனியுரிசம் (Brain Aneurysm) கட்டி வெடிக்கும் போது, நிலைமை இன்னும் மோசமாகி உயிர் பிழைப்பது மிக கடினமாகி விடுகிறது. எங்கள் மருத்துவமனையில், அண்மையில் மூளை அனியுரிசம் (Brain Aneurysm) கட்டி வெடிப்பு ஏற்பட்ட கைக்குழந்தைக்கு சிகிச்சை அளித்து, வெற்றிகரமாக காப்பாற்றி உள்ளோம். இந்த குழந்தை எவ்வாறு ஆபத்திலிருந்து மீண்டது என்பதை, உங்கள் அனைவரிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்” என தெரிவித்தார்.

கட்டுப்படுத்த முடியாத வலிப்புடன் உடல் மூட்டு மற்றும் தசைகளில் எந்த அசைவும் இன்றி, நினைவிழந்து கோமாவிற்கு சென்ற நிலையில், எங்கள் மருத்துவமனைக்கு 7.5 கிலோ எடையுள்ள ஒன்பது மாத கைக்குழந்தை கொண்டுவரப்பட்டது. மற்றொரு மருத்துவமனையில் இருந்து வெண்டிலேட்டர் உதவியுடன் நிலையற்ற ரத்த அழுத்தம் மற்றும் இதயத்துடிப்புடன். இக்குழந்தை எங்கள் மருத்துவமனைக்கு வந்தது. முதலில் எங்கள் அவசர சிகிச்சை குழுவினர் தந்த சிகிச்சையால், குழந்தை ஆபத்து நிலையை கடந்தது. பின் எங்களது நரம்பியல் அவசர சிகிச்சை குழுவினரால் அதன் இரத்த ஓட்டம் சீராக்கப்பட்டது. குழந்தைக்கு எடுக்கப்பட்ட சிடி ஸ்கேன் (CT Scan) மூளையில் பரவலான இரத்தக்கசிவு இருப்பதை காட்டியது.

குழந்தையின் உடல் நிலையை சீராக்கிய பின்னர், எங்கள் ஹைபிரிட் நியூரோ கார்டியாக் கேத் லேபில் (Hybrid Neuro-Cardiac Cathlab) ஜெனரல் அனஸ்தீசியா (General Anesthesia) தந்து, ப்ரெயின் ஆஞ்சியோகிராபி (Digital Subtraction Angiography - DSA) செய்ய திட்டமிட்டோம். ஆஞ்சியோகிராபி (Angiography) எடுத்து பார்த்த போது, ஒரு பெரிய சாக்குலர் அனியுரிசம் (Saccular aneurysm) மூளையில் வெடித்து இரத்தக் கசிவு ஏற்பட்டுள்ளது தெரியவந்தது. இந்த வெடிப்பு மூளையின் ஆன்டீரியர் கம்யூனிகேடிங் ஆர்ட்டரியில் (anterior communicating artery (ACOM காணப்பட்டது. மேலும் பல சிறிய அனியுரிசம்களும் உடன் இருந்தன. குழந்தையின் ஆபத்தான நிலையையும், மேற்கொள்ளப் போகும் சிகிச்சையும் பெற்றோருடன் விவாதித்த பின்னர், நியூரோ ரேடியாலஜிஸ்ட் (Neuro-radiologist) டாக்டர் விநாயக மணி, நியூரோஅனஸ்தீசியாலஜிஸ்ட் (Neuro-Anesthesiologist) டாக்டர் என் அருண்குமார் மற்றும் கேத் லேப் (Cathlab) ஊழியர்கள் உடன் இணைந்து பலூன் அசிஸ்டட் காயில்ஸ் (Balloon-Assisted Coils) பயன்படுத்தி என்டோவாஸ்குலர் (Endovascular) சிகிச்சை செய்திட தீர்மானிக்கப்பட்டது.

டாக்டர் விநாயகமணி கூறியதாவது. குழந்தையின் வயது மற்றும் குழந்தையின் உடல்நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு நியூரோ எண்டோ வாஸ்குலர் (Neuroendovascul) குழு, மண்டை ஓட்டை திறந்து செய்யும் ஓபன் மைக்ரோ சர்ஜிகல் கிளிப் (Opening the skull and microsurgically clip) முறைக்கு பதிலாக, நியூரோ எண்டோஸ்டீலர் (Neuroendovascular) மூலம் அனியரிசம் கட்டியை சிகிச்சை செய்ய முடிவு எடுத்தோம். இந்த செயல்முறையில் குழந்தையின் வலது தொடையில் ஒரு சிறிய துளையிட்டு (Pinhole Incision) அதன் மூலம் மூளையின் இறந்த நாளத்தை தொடர்பு கொண்டோம் மிகச்சிறிய மைக்ரோ சுத்திட்டாஸ் (Micro-Catheters) வளது பிமோரல் ஆர்ட்டரி (Right Femoral Artery) வழியாக உள்ளே அனுப்பப்பட்டு, மூளைக்கு ரத்தத்தை வழங்கும் நாளங்கள் மற்றும் அனியுரிசம் கட்டியை நோக்கி கத்திட்டர்ஸ்-ஐ செலுத்தினோம். இந்த சிறிய துளையீட்டு முறையி மூலமாக பலூன் அசிஸ்டன்ஸ் (Balloon Assistance) உடன் 5 பிளாட்டினம் ஹைட்ரோ சாஃப்ட் காயில்களை (5 platinum Hydrosoft coils) வெற்றிகரமாக உள்செலுத்தி அணியுரிசம் கட்டியை முறையாக மூடுவதோடு மேலும் இரத்தக் கசிவு ஏற்படாமல் தடுக்கவும் முடிந்தது.

இந்த செயல்முறை, குழந்தையின் சிறிய உடல் கூறு அமைப்பு காரணமாக, பெரும் சவால்களை ஏற்படுத்தியது. இதற்கு மிகுந்த துல்லியம் மற்றும் நுண்ணிய செயல்பாடுகள் தேவைப்பட்டது. மேலும் குழந்தைகளின் உடல் சிறியதாக இருப்பதால், அவர்களுக்குஅறுவை சிகிச்சை செய்யும்போது, இரத்த இழப்பு, உடல் வெப்பநிலை. ஏற்றத்தாழ்வு, மயக்க மருந்து பாதிப்பு, அறுவை சிகிச்சையால் ஏற்படும் பாதிப்பு ஆகியன அதிகமாக இருக்கக்கூடும்.

அறுவை சிகிச்சைக்கு பின்னர் எடுக்கப்பட்ட ஸ்கேன், குழந்தைக்கு மேலும் ரத்தக் கசிவோ, பாதிப்போ ஏற்படவில்லை என்ற சிறந்த முடிவை காண்பித்தது குழந்தை வெண்டிலேட்டர் (ventilator) உதவியுடன் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, சில நாட்களுக்குப் பிறகு கை, கால்களை அசைத்து தொடங்கி சுயநினைவு வந்ததும் வெண்டிலேட்டிலிருந்து நீக்கப்பட்டது. இது நியூரோ எண்டோவாஸ்குலர் சர்ஜரி நடந்த 5 வது நாளில் நடந்தது 10வது நாளில் இருந்து வாய்வழி உணவுகள் எடுத்துக் கொள்ளத் தொடங்கி, குழந்தை விரைவாக நலம் பெற்றது. அதன் பிறகு இன்டென்சிவ் கேர் (Neuro intensive Care) யூனிட்டில் இருந்து நார்மல் வார்டிற்கு மாற்றப்பட்டது. 17 வறு நாளில் குழந்தை எந்த பக்கவிளைவும், குறைபாடும் இல்லாமல், வழக்கமான உணவு எடுத்துக் கொள்ளும் சீரான நிலையில் டிஸ்சார்ஜ் செய்யப்ப்பட்டது. கடந்த ஒரு மாதமாக குழந்தை வீட்டில் இயல்பாக இருக்கிறது. இது எதிர்காலத்தில் இத்தகைய சிகிச்சை மேற்கொள்வதற்கு மிகுந்த நம்பிக்கையை அளிக்கிறது என்று குறிப்பிட்டார்.

இந்த அறுவை சிகிச்சை, மூளை அனியுரிசம் வெடித்து ஏற்பட்ட கைக்குழந்தைக்கு மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான எண்டோவாஸ்குலர் (Neuroendovascular) அறுவை சிகிச்சைகளில் அரிதான ஒன்றாகும். இந்த புதுமையான அணுகுமுறை மற்றும் வெற்றிகரமான முடிவுகள், குழந்தைகள் மூளை நரம்பியல் எண்டோவாஸ்குலர் அறுவை சிகிச்சையில், நம் இந்திய நாட்டின் வலிமையை உலகிற்கு உணர்த்துவதோடு, எதிர்காலத்தில் இதுபோன்ற சிக்கலான அறுவை சிகிச்சையை எதிர்கொள்ளும் நோயாளிகளுக்கு நம்பிக்கையை தருவதாக உள்ளது.

# பிரபுதேவாவின் முதல் லைவ் நடன நிகழ்ச்சி: பிப்.22-ல் நந்தனம் ஒய்எம்சிஏ-வில் நடைபெறுகிறது



அருண் ஈவண்ட்ஸ் சார்பில் பிரபல நடிகரும், நடனக் கலைஞருமானபிரபுதேவாவின் லைவ் நடன நிகழ்ச்சி, சென்னை நந்தனம் ஒய்எம்சிஏ மைதானத்தில் பிப்.22-ம் தேதி நடைபெறுகிறது. இது பிரபுதேவாவின் முதல் லைவ் நிகழ்ச்சியாகும். தமிழ் சினிமாவில் நடனக்கலைஞராக அறிமுகமான பிரபுதேவா, பரதம், ஃபோக், வெஸ்டர்ன் வகைகளின் கலவையை தனது நடனத்தில் வெளிப்படுத்தினார். இது ரசிகர்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றது. தொடர்ந்து 1989-ல் வெளியான இந்து என்ற திரைப்படத்தில் நடிகராக அறிமுகமான அவர், காதலன், லவ் பேர்ட்ஸ் என பல்வேறு படங்களில் நடித்து ரசிகர்களின் அபிமானத்தை பெற்றார். குறிப்பாக மின்சாரக் கனவு திரைப்படத்தில் இடம்பெற்ற வெண்ணிலவே வெண்ணிலவே பாடலுக்கு சிறந்த முறையில் நடனம் அமைத்ததற்கு தேசிய திரைப்பட விருதையும் பெற்றார். பின்னர் தமிழ், இந்தி ஆகிய மொழிகளில் திரைப்படங்களை இயக்கி இயக்குநர் அவதாரம் எடுத்தார். இவ்வாறு நடன இயக்குநர், நடனக் கலைஞர், நடிகர், திரைப்பட இயக்குநர் என பல்வேறு திறமைகளைக் கொண்டிருக்கும் பிரபுதேவா, இதுவரைதனது நடனநிகழ்வை லைவ் ஆக நடத்தியதில்லை. இந்நிலையில் முதன் முறையாக லைவ் நிகழ்ச்சி, சென்னை நந்தனத்தில் பிப்.22-ம் தேதி நடைபெறவுள்ளது. இதுதொடர்பாக பிரபுதேவா கூறியதாவது: இப்படியொரு நிகழ்ச்சி நான் நினைத்து கூட பார்த்ததில்லை. லைவ் நிகழ்ச்சி என்னும்போது சினிமாவில் பார்ப்பது போல் எதிர்பார்க்க முடியாது. அங்கு ஒரு பாடலுக்கு இடையில் ஏராளமான கட் இருக்கும். மேடையில் அப்படி முடியாது. தொடர்ச்சியாக 8 நிமிடங்கள் வரை ஆட வேண்டியிருக்கும். இதற்காக தொடர்ந்து ஒத்திகையில் ஈடுபட்டு வருகிறேன். ரசிகர்கள் எதிர்பார்ப்பதை விட 200 சதவீத திறமையான நடனத்தை வெளிப்படுத்துவேன். இந்நிகழ்ச்சி கண்டிப்பாக அனைவரையும் ஆச்சரியப்படுத்தும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# திவ்யபாரதி உடன் டேட்டிங்கா? - ஜி.வி.பிரகாஷ் மறுப்பு



நடிகை திவ்யபாரதி உடன் டேட்டிங்கில் இருக்கிறார் இசையமைப்பாளரும் நடிகருமான ஜி.வி.பிரகாஷ் என தகவல்கள் பரவி வந்தன. இதற்கு ஜி.வி.பிரகாஷ் மறுப்பு தெரிவித்திருக்கிறார். ‘கிங்ஸ்டன்’ படத்தை விளம்பரப்படுத்தி வருகிறார் ஜி.வி.பிரகாஷ். இதற்காக அளித்தபேட்டியில் “நான்ஏதோ திவ்யபாரதி உடன் டேட்டிங்கில் இருப்பதாக செய்திகள் வருகின்றன. அவரை படப்பிடிப்பு தளத்தில் மட்டுமே நான் சந்தித்தது உண்டு. படப்பிடிப்பு தளத்தினை தாண்டி வெளியே எங்கேயும் அவரை சந்தித்தது இல்லை. எனக்கு திவ்யபாரதி ஒரு நல்ல நண்பர் மட்டுமே” என்று குறிப்பிட்டுள்ளார். இப்படத்தில் ஜி.வி. பிரகாஷுக்கு நாயகியாக நடித்திருப்பது திவ்யபாரதிதான். ‘பேச்சிலர்’ படத்துக்குப் பின் இந்த ஜோடி மீண்டும் இணைந்து நடித்துள்ளது. இந்தப் பேட்டியின் போது திவ்யபாரதியும் உடன் இருந்தார். இந்தப் பதிலின்போது “எனக்கும் பலர் மெசேஜ் அனுப்புவார்கள். உடனே இவருக்கு அனுப்புவேன். இவரோ விடுங்க பார்த்துக் கொள்ளலாம் என்பார். சில சமயங்களில் கஷ்டமாக இருக்கும்” என்று தெரிவித்துள்ளார். மார்ச் 7-ம் தேதி வெளியாகவுள்ள படம் ‘கிங்ஸ்டன்’. கமல் பிரகாஷ் இயக்கியுள்ள இப்படத்தில் ஜி.வி.பிரகாஷ், திவ்ய பாரதி, அழகம் பெருமாள், சேத்தன், இளங்கோ குமாரவேல் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். ஜீ ஸ்டூடியோஸ் நிறுவனத்துடன் இணைந்து இப்படத்தினை தயாரித்துள்ளார் ஜி.வி.பிரகாஷ். நிகழ்ச்சியின் இயக்குநராக ஹரிகுமார் பொறுப்பேற்றுள்ளார். பங்குதாரராக இந்து தமிழ் திசை இணைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஆர்எஸ்பி சென்னை அணிகள் சாம்பியன்



சென்னை: அகில இந்திய சிவில் சர்வீஸ் வாலிபால் போட்டி சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் மகளிருக்கான இறுதிப் போட்டியில் ஆர்எஸ்பி சென்னை 25-09, 25-17, 25-15 என்ற செட் கணக்கில் ஆர்எஸ்பி பெங்களூரு அணியை வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றது. அந்த அணி தொடர்ச்சியாக 4-வது முறையாக தங்கப் பதக்கம் வென்றுள்ளது.

ஆர்எஸ்பி கொல்கத்தா 3-வது இடம் பிடித்து வெண்கலப் பதக்கம் பெற்றது. 2-வது இடம் பிடித்த பெங்களூரு வெள்ளிப் பதக்கம் கைப்பற்றியது. ஆடவர் பிரிவில் ஆர்எஸ்பி சென்னை தங்கப் பதக்கம் வென்றது. இறுதிப் போட்டியில் அந்த அணி 25-21, 25-22, 25-15 என்ற செட் கணக்கில் டெல்லி மத்திய தலைமைச் செயலகம் அணியை தோற்கடித்தது. 3-வது இடத்தை ஆர்எஸ்பி கொச்சின் பிடித்தது.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் போலீஸ் ஐஜி வி. பாலகிருஷ்ணன். வருமான வரித்துறை ஆணையர் எஸ்.பாண்டியன், சுங்கத்துறை கூடுதல் ஆணையர் ஏ.கோவிந்தராஜ், ரோமா குழுமத்தின் நிர்வாக இயக்குநர் ஆர்விஎம்ஏ ராஜன், வருமான வரித்துறை ஆய்வாளர் சி. ஸ்ரீகேசவன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# ஹாக்கியில் ஜெர்மனியை வீழ்த்தியது இந்தியா!



புவனேஷ்வர்: ஆடவருக்கான எஃப்ஐஹெச் புரோ லீக் ஹாக்கி தொடரில் நேற்றுபுவனேஷ்வரில் உள்ள கலிங்கா மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா, உலக சாம்பியனான - ஜெர்மனியை எதிர்த்து விளையாடியது. இதில் இந்திய அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. 4-வது நிமிடத்தில் குர்ஜாந்த் சிங் பீல்டு கோல் அடித்து அசத்தினார். ஆட்டத்தில் பெரும்பாலும் இந்திய அணி ஆதிக்கம் செலுத்திய நிலையில் இறுதிப்பகுதியில் ஜெர்மனி அணி கோல் அடித்து டிராவில் முடிக்க போராடியது. ஆனால் இந்திய அணியினர் டிபன்ஸில் பலமாக செயல்பட்டு ஜெர்மனி அணியை கோல் அடிக்கவிடாமல் பார்த்துக் கொண்டனர். கடைசி கால்பகுதியில் மட்டும் அந்த அணிக்கு 5 பெனால் கார்னர் வாய்ப்புகள் கிடைத்தது. ஆனால் அனைத்தையும் இந்திய டிபன்ஸ் தகர்த்தது. கடந்த செவ்வாய்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் ஜெர்மனியிடம் 4-1 என்ற கோல் கணக்கில் இந்திய அணி தோல்வி கண்டிருந்தது. இந்த தோல்விக்கு தற்போது இந்திய அணி பதிலடி கொடுத்துள்ளது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd s treet, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA.V. Cell-94436 99066